நேற்று முன்தினம் (13.07.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "மொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான முனைவர் ப.செந்தில் குமார், உறுப்பினர்கள் நீதியரசர் அக்பர் அலி, கவிஞர் ரவி சுப்பிரமணியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து - சாலை பாதுகாப்பு ஆணையரின்

இணையதளம் முறைப்படி தமிழில் மொழிபெயர்ப்பு!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில்!

சென்னை, ஜூலை.15- போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையரின் இணையதளம் முறைப்படியாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு துறைகளுக்கான இணையதளங்களை ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் ஆணையிட்டதற்கு இணங்க போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையரின் இணையதளம் முறைப்படியாக தமிழில் தயாரிக்கப்பட்டு நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்தத் தமிழ் இணையதளத்தினை முறைப்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (13.07.2023) தலைமைச் செயலகத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இந்த நிகழ்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்து (ம) சாலைபாதுகாப்பு ஆணையர் அ.சண்முக சுந்தரம், மற்றும் தேசியத் தகவல் மையத்தின் மாநிலத் தகவல் இயல் அலுவலர் ஆண்டனி, தேசிய தகவல் மையத்தின் முதுநிலை இயக்குநர் ஈஸ்வரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

மாநிலம் முழுவதும் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும், 54 வாகன போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் தங்களது சேவைகளை எவ்வித சிரமமும் இன்றி பெறும் வகையில் 48 சேவைகளை முழுக்கவும் கணினி மயப்படுத்தி ஆன்லைன் மூலமே பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக ஏற்கனவே கீழ்க்கண்ட 6 சேவைகள் இணையதளத்தில் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

மேலும் இதனை அடுத்து 42 சேவைகள் ஆன்லைனில் கொண்டு வரப்படும் என்று 2023-24ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில் போக்குவரத்து துறை அமைச்சர் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக நேற்று முதல் (14.07.2023) கீழ்க்கண்ட 25 சேவைகள் ஆன்லைனில் கொண்டு வரப்படவுள்ளன. மேலும், மீதமுள்ள கீழ்க்கண்ட 17 சேவைகளையும் ஆன்லைனில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தேசிய தகவல் மையம் எடுத்து வருகிறது. இந்த பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், வாகன போக்குவரத்து ஆய்வாளர் அலுவலங்கள் ஆகியவற்றில் மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளை விரைந்து அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆன்லைன் சேவைகளை பொதுமக்கள் பெறுவதற்கு முதலில் தங்களது ஆதார் அட்டையில் உள்ள பெயர், முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அப்டேட்ஆக இருப்பதை உறுதி செய்த பின்னரே உள்ளீடு செய்ய முடியும். விவரங்கள் மாறுபட்டிருந்தால் இந்த ஆன்லைன் சேவையை பெற இயலாது.

எம்.எல்.ஆர். மற்றும் ஓட்டுநர் உரிமம் பெறுவதில் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் வருவதால் விண்ணப்பங்களின் எண்ணிக்கை எந்தெந்த அலுவலகங்களில் அதிகமாக உள்ளதோ அல்லது பெறப்படுகின்றதோ அந்த அலுவலகங்களை சனிக்கிழமை அன்றும் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் அந்தந்த மாவட்டத்தில் எந்தெந்த அலுவலகங்கள் சனிக்கிழமை அன்று செயல்படும் என்பது போன்ற அனைத்து விவரங்களை உள்ளடக்கிய விரிவான பத்திரிக்கைச் செய்தியும் வெளியிடப்படும். இந்த வசதியினையும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு - மூன்று நாட்கள் நடைபெறுகிறது!

தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் நாட்டிய விழா!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

தலைமை: வாகை சந்திரசேகர்! முன்னிலை: விஜயா தாயன்பன்!

சென்னை, ஜூலை 15- தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாட்டிய விழா நடைபெறுகிறது.

ஜூலை 14,15,16 (வெள்ளி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் சென்னை - இராஜா அண்ணாமலை புரம் முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கில் இவ் விழா நடைபெறுகிறது.

15.7.2023

15.7.2023 - சனிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் தொடங்கும் விழாவில் - இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

மூத்த நாட்டியக் கலைஞர் கலைமாமணி நந்தினி ரமணி, முத்மிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.இராமானுஜம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழாவில் - கலை மாமணி பார்வதி ரவி கண்ட சாலா குழுவினரின் 'காவியக் கவிதைகள்' நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

16.7.2023

16.7.2023 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குத் தொடங்கும் விழாவில் - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்புப் பேசுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாப் பேருரையாற்றுகிறார்.

சென்னை - சிதம்பரம் அகாடமி ஆஃப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் நிறுவனர் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவில் - கலை மாமணி முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளி வழங்கும் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' இசை நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கொத்தமங்கலம் மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 10.07.2023 அன்று திறந்து வைத்தார். உடன் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது தொகுதி மேம்பாட்டு நிதி (2022-23) திட்டத்தின் கீழ் ரூ.18.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கீழக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் புதிய கட்டிடம் அமைத்து மாணவச் செல்வங்களுடன் இணைந்து திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் கங்காதரன், ஒன்றிய பெருந்தலைவர் சத்தியா கோவிந்தராஜ், நவல்பட்டு சண்முகம், பாலசுப்பிரமணியன், சாந்தகுமார், கிருஷ்ணன், கயல்விழி மற்றும் கழக நிர்வாகிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்

ரூ.10 கோடி செலவில்

ஏற்காட்டில் சுற்றுலா மேம்பாட்டிற்கு நடவடிக்கைகள்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

சேலம், ஜூலை 15- நவீன காலமாற்றத்திற்கேற்ப சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் மேட்டூர் மற்றும் சேலத்தில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல்களில் ஆய்வு மேற்கொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மேட்டூர் மற்றும் சேலத்தில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல்களில் நேற்று முன்தினம் (13.07.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்விற்குப்பின், சுற்றுலாத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளையும் சிறப்பாகச் செயல்படுத்தி தமிழ் நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். தமிழ்நாட்டில் அதிக கோவில்கள் அமையப்பெற்றுள்ளதால் இதன் பழமை, கலை, பண்பாடு உள்ளிட்ட பல்வேறு சிறப்புகள் அதிகளவிலான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

நவீன காலமாற்றத்திற்கேற்ப சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றைய தினம், மேட்டூரில் உள்ள தமிழ்நாடு ஹோட்டலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மேட்டூர் அணைப் பூங்காவை சுற்றுலாத் துறையின் மூலம் பராமரித்திட வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர். இதுகுறித்து தொடர்புடைய துறையின் மூலம் கருத்துரு கிடைக்கப் பெற்றால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், சேலம் மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு ஹோட்டலை பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாநகராட்சி மேயர் மற்றும் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைத்தொடர்ந்து நாளைய தினம் ஏற்காட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குயிக் பைட்ஸ் எனும் சிறு உணவகம் திறந்து வைக்கப்படவுள்ளது. மேலும், ஏற்காட்டில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் படகுக் குழாம் ஆகியவற்றையும் ஆய்வு செய்ய உள்ளோம். சுற்றுலாத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து ஹோட்டல்களையும் தனியார் ஹோட்டல்களுக்கு நிகராக தரம் உயர்த்தப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஏற்காடு சுற்றுலாத் தளத்தில் நில சீரமைப்பு, காட்சி முனை, உட்கட்டமைப்பு மற்றும் பிற சுற்றுலா வசதிகளுடன் மேம்படுத்தப் படவுள்ளது. மேலும், ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள படகு இல்லங்களில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மிதவை உணவகங்கள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர, ஏற்காட்டில் உள்ள எமரால்டு ஏரியில் 3டி தொழில்நுட்பத்துடன் கூடிய நீர் சார்ந்த ஒலி, ஒளி காட்சியும் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், துணை மேயர் திருமதி.மா.சாரதா தேவி, முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அம்பாயிரநாதன் மற்றும் மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் ஆ.தணிகாச்சலம் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

மா.நாகராஜ் தலைமை! ப.மோகன்ராஜ் வரவேற்புரை!

கோவை - ஆவாரம்பாளையத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

வாகை சந்திரசேகர் - கோவை நா.கார்த்திக் சிறப்புரை!

கோவை, ஜூலை 15- கோவை மாநகர் மாவட்டம், பீளமேடு பகுதி 2 தி.மு.க. சார்பில், 11.7.2023 - செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில், கோவை ஆவாரம்பாளையம் ரெட்ரோஸ் மைதானத்தில், முத்தமிழ் அறிஞர் செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம், பீளமேடு பகுதி 2 செயலாளர் மா. நாகராஜ் தலைமையில், 28ஆவது வட்ட கழக செயலாளர் ப.மோகன்ராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், பீளமேடு பகுதி2 நிர்வாகிகள் பா.மா.கிருஷ்ண மூர்த்தி, வ.விஜய், இரா.நாகராஜ், ப.சுஜாதா, ஆர்.சதீஷ்குமார், கேபிள் ராஜேந்திரன், கே.என்.ராஜேந்திரன், வட்ட கழக செயலாளர் ஜெபமாலை தாஸ், மாமன்ற உறுப்பினர் அன்னக்கொடி, எத்திராஜ், மு.ஈஸ்வரன் மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற தலைவர், கழக மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர், கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், பொதுக்குழு உறுப்பினர்கள் மு.மா.ச.முருகன், ஜோ.நோயல்செல்வம். ச.குப்புசாமி, வெ.ந.உதயகுமார், ச.கார்த்திகேயன், ஆடிட்டர் சசிகுமார், சரஸ்வதி புஷ்பராஜ் மாநில தீர்மானக்குழு இணை செயலாளர் பி.நாச்சிமுத்து, மாநில தீர்மானக்குழு உறுப்பினர் மு.ரா.செல்வராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ. தமிழ்மறை, மாநில தொழிலாளர் அணி துணை செயலாளர் தமிழ்ச்செல்வன், பகுதி செயலாளர்கள் ப.பசுபதி, துரை.செந்தமிழ் செல்வன், அஞ்சுகம் பழனியப்பன், கோவை மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, மாமன்ற உறுப்பினர் அம்பிகா தனபால், மரியராஜ், வார்டு செயலாளர்கள் சிவகுமாரன், ஆ.மாடசாமி ஆனந்தகுமார், குமார், இளங்கோவன், கராத்தே வீரமணி, தாமோதரன், புகழேந்தி, நித்தியானந்தம், பொன்ராஜ், சிவக்குமார், நவீன் முருகன், சபரி தன்ராஜ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ராஜா, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், மருதமலை கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர் மகேஷ் குமார், தலைமை கழகப் பேச்சாளர்கள் சிங்கை சௌந்தர், அதிரடி அல்தாப், மாவட்ட அணி அமைப்பாளர்கள் தனபால், சுரேஷ்குமார், பாபு, அக்ரிபாலு, கனிமொழி, மேரிராணி, மு.ராம்குமார், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம்தேவ், மணிகண்டன், அருண்குமார், இப்னு மசூது, துரை பிரவீன்குமார், சிவபிரகாஷ், பாலமுரளி கிருஷ்ணன், வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் சரவணன், போனஸ் பாபு, லட்சுமணன், பிரின்ஸ், வசந்தகுமார், சதாசிவம், சரவணகுமார், வைரமணி, வசந்தகுமார், சிங்கை கனகராஜ், எஸ்.பி.வேலுச்சாமி, நாராயணசாமி, செல்லப்பா, சகிரா, அகஸ்டியன், ரவி, சம்பத், கந்தசாமி, சுந்தர்ராஜ், சரவணன், பாலசுந்தரம், கே.எஸ்.கிருஷ்ணன், ரங்கநாதன், த.டைட்டஸ், ராதாகிருஷ்ணன், மாரிமுத்து, சுப்புராஜ், டேனியல், பழனிச்சாமி, குரு மாணிக்கம், சக்திவேல் ராமமூர்த்தி, ரவிச்சந்திரன், சுரேஷ், மணி, சொக்கர், பிந்து, சந்திரகலா, பிரகாஷ், பிரேம்குமார், அசோக்குமார், கழக நிர்வாகிகள், கழகஉடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். பீளமேடு பகுதி2 மாவட்ட பிரதிநிதி கேபிள் சேகர் நன்றியுரை கூறினார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகம்- திருவரங்கம் பெரியார் பாசறை நடத்தும்

"முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா" - 5 நாட்கள் தொடர் நிகழ்ச்சிகள்!

மாவட்டச் செயலாளர் க.வைரமணி - மேயர் அன்பழகன் துவக்கி வைப்பு! சீனி விடுதலை அரசு சிறப்புரை!

திருவரங்கம், ஜூலை 15- தந்தை பெரியார் திராவிடர் கழகம் மற்றும் திருவரங்கம் பெரியார் பாசறை நடத்தும் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சிகள் 12.7.2023 முதல் 16.7.2023 முடிய 5 நாட்கள் நடைபெறுகிறது. இதில் முதல் நாள் நிகழ்ச்சியில் திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி, மேயர் மு.அன்பழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர். பகுதிக் கழக செயலாளர் என்.ராம்குமார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதல் நாளில் தந்தை பெரியார் திராவிடர் கழக கொள்கை பரப்புச் செயலாளர் சீனி விடுதலை அரசு "அண்ணா வழியில் அயராது உழைப்போம்" என்ற தலைப்பில்சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்ச்சிகளில் வெல்லமண்டி சோமு, இந்திரஜித், வி.ஜவஹர், அ.க.தமிழரசன், ராயல் ராஜா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மேலும் இதில் ச.பிரபாகரன், ப.சாய்பிரகாஷ், கோ.ரவிச்சந்திரன், காமராஜ், ம.ராஜாங்கம், மு.அறிவழகன், எம்.மணிவாசகம், இளங்கோவன், சீனிவாசன், கு.வீரன், ஏ.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

சென்னை, மாநகர் போக்குவரத்துக் கழக அடையார் பணிமனையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கனரக பாவனையாக்கினை (HMV DRIVING SIMULATOR) திறந்துவைத்தார். இந்நிகழ்வின் போது, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மௌலானா, போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மேலாண் இயக்குநர் அ.அன்பு ஆபிரகாம், இணை மேலாண் இயக்குநர் க.குணசேகரன், பொது மேலாளர்கள். உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.